**STARTING TIME 11.13 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 233/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 07.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ஜானகிராமன் Father's Name : பத்தவச்சலு

Address : சுப்பாநாயுடு கண்டிகை கிராமம், அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 70

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், அப்பா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதியின் தகப்பனார் பெயர் என்னவென்றால், சந்திரசேகர் ராவ் ஆகும். வாதி எனக்கு என்ன உறவு என்றால், எனது தங்கை மகள் ஆவார். என்னென்ன சொத்துக்களில் பாகம் கேட்டு வாதி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், தெரியும்.

2. தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியுமா என்றால், சுமார் 6 ஏக்கர் ஆகும். தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால், ஒரு சில சொத்திற்கு தெரியும், சில சொத்துக்களுக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால், மாங்காட்டுசேரி கிராமத்தில் சில சொத்துக்களும், தக்கோலம் கிராமத்தில் சில சொத்துக்களும் உள்ளது.

3. தாவா சொத்துக்கள் முதலில் யார் பெயரில் இருந்தது என்று தெரியுமா என்றால், செங்கையா நாயுடு குமாரர் போலையா நாயுடு பெயரில் இருந்தது. பிறகு போலையா நாயுடு அவர் மகன் பக்தவச்சலம் பெயருக்கு தானமாக எழுதி வைத்தார். தாவா சொத்துக்கள் அனைத்தும் போலையா நாயுடுவால் கிரையமாக வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். போலையா நாயுடு அவர் மகன் பக்தவச்சலம் பெயருக்கு தான பத்திரத்தை எந்த வருடம் எழுதி வைத்தார் என்றால், 1986–ம் ஆண்டு எழுதி வைத்தார்.

4. பக்தவச்சல நாயுடு தானமாக பெற்ற சொத்தை பொறுத்து கிரையம் எதுவும் செய்துக் கொடுத்தாரா என்றால், இல்லை. பக்தவச்சல நாயுடு மனைவி பெயர் என்னவென்றால், ரவணம்மாள். பக்தவச்சல நாயுடு எனது தகப்பனார் என்றால், சரிதான். எனது உடன்பிறந்தவர்கள் பெயர் என்னவென்றால், நான் மூத்த மகன், எனக்கு பிறகு சுதாகர், விஜயகுமார், லலிதா, வாணி ஆகியோர் பிறந்தார்கள்.

5. லலிதாவுக்கு யாருடன் திருமணமானது என்றால், சந்திரசேகர ராவ் என்பவருடன் திருமணம் நடந்தது. மேற்படி இருவருக்கும் எத்தனை வாரிசுகள் என்றால், ரேகா மற்றும் வாதி கிரண்மாயி என்ற இரண்டு மகள்கள் மற்றும் மகன் ஸ்ரீஅர்ஷா ஆகிய மூவர் வாரிசுகள், அதில் மகன் ஸ்ரீஅர்ஷா 1986–ம் ஆண்டு சிறுவயதிலேயே திருமணமாகாமல் காலமாகிவிட்டார். அவர் காலமானார் அன்றே எனது சகோதரி லலிதாவும் காலமாகிவிட்டார்.

6. எனது தகப்பனார் பக்தவச்சலம் எப்போது காலமானார் என்றால், 1998–ம் ஆண்டு காலமானார். எனது தாயார் ரவணம்மாள் எப்போது காலமானார் என்றால், 2005–ம் காலமானார். எனது தகப்பனார், தாயார் உயிருடன் இருந்த போது தாவா சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வாதிக்கும், அவரது சகோதரிக்கும் கொடுத்தார்களா என்றால், இல்லை.

7. தாவா சொத்துக்களை வாதியும், நான் மற்றும் 2 முதல் 7 வரை பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால், சரியல்ல. நான்

இவ்வழக்கில் எனக்காக மட்டும் சாட்சி அளிக்கிறேனா அல்லது மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேனா என்றால், எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன்.

8. தாவா சொத்துக்களை தற்போது யார் அனுபவித்து வருவது என்றால், நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்துக்களை நான் அனுபவித்து வருவதற்கு ஆதரமாக வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால், என் தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

9. வாதி வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால், சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து சில ஆவணங்களின் நகலை வாங்கி தாக்கல் செய்துள்ளார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.34 A.M.**

Special
Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.07 13:42:33 +0530